ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1–20

(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2024), மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2024)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த 3 சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவை மூன்றுக்கும் சேர்த்தே கருத்து சொல்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இரண்டு சட்டமுன்வடிவுகள் குறித்து ஏற்கெனவே தீர்மானங்கள்*

@ *22-2-2024 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

2024 பிப்ரவரி 22] [பேரவைத் தலைவர்]

கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்டுவிட்டன. இந்தச் சட்டமுன்வடிவு குறித்து மட்டும் கருத்து சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: *சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக, ஊராட்சி ஒன்றிய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு ஒன்றிய பெருந்தலைவர் இயங்குகிறார். அதேபோன்று, நகர் மன்றங்கள், சிற்றூராட்சிகள், மாநகராட்சிகள், சட்டமன்றங்கள், நாடாளுமன்றங்கள் ஆகியவை இயங்குகின்றன. ஆக, இந்தியா ஒரு மிகப்பெரிய ஜனநாயக நாடாகும். இந்த ஜனநாயக நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கியவர்களுக்குத்தான் ஒரு துறையை நிர்வகிப்பதற்குமான, அதற்கு அனுமதி தருவதற்குமான வாய்ப்பை இந்தச் சட்டம் ஏற்கெனவே வழங்கி வந்திருக்கிறது. ஆனால், "ஊராட்சி ஒன்றியக் குழு" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஆய்வாளர்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் என்கிற வகையில் இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டுள்ளது.*

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய அரசும், தளபதி அவர்களுடைய அரசும் ஒரு ஜனநாயக அரசாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிக அதிகாரம் இருக்க வேண்டும். குறிப்பாக அரசு இயந்திரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களை, நாடாளுமன்ற உறுப்பினர்களை, உள்ளாட்சிப் பிரதிநிதிகளைக் கொண்டதாக இருந்தால்தான், உண்மையான மக்களாட்சியாக இருக்கும். அந்த அடிப்படையில் ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு இருக்கிற அதிகாரத்தைப் பிடுங்கி நாம் உள்ளாட்சித் தேர்தலை நடத்தியிருக்கிறோம்; தமிழ்நாட்டில் நம்முடைய கட்சியைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் உள்ளாட்சிப் பிரதிநிதிகளாக, ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களாக, ஊராட்சிக் குழு உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில், ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு இருக்கிற அதிகார வரம்பை எடுத்து அதிகார வர்க்கத்திற்குத் தருவதை இந்த அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்கிற கருத்தை முன்வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள், இத்திருத்தச் சட்டமுன்வடிவு குறித்து கருத்து தெரிவித்துள்ளார்கள். இந்தச் சட்டத் திருத்தம் பொதுவாக ஊராட்சிகளில் ஆரம்பிக்கக்கூடிய கடைகள், தொழிற்சாலைகள் குறித்ததாகும். இந்தத் திருத்தத்தினுடைய நோக்கம் மிக முக்கியமானதாகும். கிராம ஊராட்சிகளில், சாதாரணமாக ஒரு டீ கடை ஆரம்பிக்க வேண்டுமென்றாலும், ஒரு கடை வைக்க வேண்டுமென்றாலும் அது dangerous, offensive trade என்று 1958 ஆம் ஆண்டைய சட்டத்தில் இருந்து வருகிறது. சாதாரணமாக கிராம ஊராட்சிகள், கடைகள் துவங்குவதற்குரிய Trade licence கொடுத்தால் போதும் என்று இத்திருத்தச் சட்டமுன்வடிவில் மாற்றியிருக்கிறோம். தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 சட்டத்தில் உள்ள dangerous, offensive trade என்ற version-ஐ மட்டும்தான் எடுக்கிறோம்.

மற்றொன்று என்னவென்றால், கிராமப் பஞ்சாயத்துகள், டீ கடை போன்ற வணிக நிறுவனங்களை வைப்பதற்கான licence-ஐ 30 நாட்களுக்குள் கொடுக்க வேண்டும். அவ்வாறு 30 நாட்களுக்குள் கொடுக்கவில்லையென்றால், அனுமதி கேட்டவர்களுக்கு கஷ்டம் ஏற்படும். எனவே, 30 நாட்களுக்குப் பிறகு, automatic ஆக it is deemed to be approved எனக் கொள்ளப்படும் என்ற திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஏனென்றால், சில இடங்களில் உள்ளாட்சி அமைப்புகள் licence கொடுப்பதற்கு தாமதம் செய்கிறார்கள். அவர்களுக்குப் பிடிக்காதவர்கள் என்றால், licence கொடுக்க மாட்டார்கள். இல்லையெனில், **, தாமதம் செய்கிறார்கள். இதனால், நிறைய சிரமங்கள் ஏற்படுகின்றன; இது ஒன்று.

இரண்டாவது என்னவென்றால், தற்போது கிராமப்புறங்களில் பெரிய தொழிற்சாலைகள் துவங்கப்படுகின்றன. அவ்வாறு துவங்கப்படும்போது, சம்பந்தப்பட்டவர்கள் உரிய உள்ளாட்சி அமைப்புகளில் running licence கேட்கிறார்கள். ஆனால், அந்த அமைப்புகளால் licence கொடுப்பதற்கு வருடக்கணக்கில் purpose ஆக தாமதம் ஏற்படுத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2024 பிப்ரவரி 22] [திரு. இ. பெரியசாமி]

அவர்களுக்கு அதிகாரம் கேட்கிறார்கள்; அது உண்மைதான். அவர்களுக்கு நிறைய அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறோம். ஆனால், அதைப் பயன்படுத்துகின்ற முறை என்பது, அவர்கள் உரிய நேரத்தில் செயல்பட வேண்டும் என்பதற்குத்தான். ஏனெனில், தொழிற்சாலைகள் நிறைய வர வேண்டும் என்று விரும்புகிறோம். தற்போது சென்னையைச் சுற்றி கிராமப்புறங்களில்தான் நிறைய தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன. ஓர் உள்ளாட்சி அமைப்பில் சென்று running licence-க்காக 6 மாதங்கள், 1 வருடம் என காத்திருப்பது என்பது சரியாக இல்லை. Inspector of Panchayats என்பவர் Collectorதான். எனவே அவருக்கு வருகிறது. பன்னாட்டு நிறுவனங்கள் ஆரம்பிக்கக்கூடிய பல தொழிற்சாலைகள்கூட கிராமப்புறங்களுக்கு வருகின்றன. எனவே, அவற்றிற்கான அனுமதி விரைவாகக் கிடைக்க வழிவகை ஏற்படும். **என்று நான் சொன்னதை நீக்கிவிடுங்கள். அப்படி வருகின்றபோது, அவர்கள் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அச்சொல் நீக்கப்படுகிறது.

பிற்பகல் 1–25

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி வருகின்றபோது, அவர்கள் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி காலதாமதப்படுத்துவதைத் தடுப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. அதனால் Inspector of Panchayats-க்குக் கொடுக்கிறோம். அவர்கள் வாங்கிக்கொள்ளலாம். அதில் ஒன்றும் தடையில்லை. எனவே, இச்சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2024) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2024 பிப்ரவரி 22] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2024) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2024)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் இருப்பதுபோல், தமிழ்நாட்டில் தமிழ்நாடு ஆணையம் என்கிற பெயரில் அமைக்கப்பெறுவது சிறப்புமிக்கது; வரவேற்புக்குரியது; பாராட்டுக்குரியது. ஆனால், அந்தச் சட்டத் திருத்தத்தில் எப்படி ஒன்றிய அரசு தேசிய நெடுஞ்சாலை மற்றும் தனியார் துறை பங்களிப்பு என்றிருக்கிறதோ, அதே மாதிரி தமிழ்நாட்டிலும் தமிழ்நாடு என்ற ஆணையத்துடன் தனியார் என்கிற வார்த்தையும் நம்முடைய அறிவிப்பில் ஏற்கெனவே இடம்பெற்றிருக்கிறது. இப்போது ஒன்றிய அரசு தமிழ்நாடு முழுவதும் இந்தியாவில்

@ 21-2-2024 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.